REGD. No. M. 6311

PHONE No. [illegible]

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 230

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்

உள்நாடு (இலங்கை உட்பட)	
ஆண்டு	ரூ. 24—0—0
6 மாதம்	ரூ. 12—0—0
3 மாதம்	ரூ. 6—0—0
வெளிநாடு:	
ஆண்டு	ரூ. 30—0—0
6 மாதம்	ரூ. 15—0—0
3 மாதம்	ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: மாசி 27உ புதன் (10—3—54) ★ ★ ★ வெளியூர்: மாசி 28உ வியாழன் (11—3—54)

டெல்லி-சென்னை உருப்படாத உறவு!

—(:)—

மத்திய சர்க்காரின் போக்கு காந்தி ராமசாமிக்கும் ஆத்திரமூட்டி இருக்கிறது!

—:o:—

ஒரு முறை அல்ல, பல முறை நெஞ்சு வலி கண்டிருக்கிறார்!

நிலைமை நீடித்தால் 'திராவிட நாடு' உருவாகிவிடுமே என கண் பிசைகிறார்!

சென்னை, மார்ச் 10—

"யூனியன் சர்க்கார் இந்த மாநிலத்தை எப்படி நடத்துகிறது என்பதை, என் ஆட்சிக் காலத்தில் நான் நன்கு அனுபவித்திருக்கிறேன். மத்திய சர்க்கார் காட்டிய போக்கின் காரணமாக, வேறு கதியற்ற நிலையில், நான் பல முறை ஆத்திரம் கொண்டிருக்கிறேன். மத்திய சர்க்கார், இந்தப் போக்கை, இரண்டின் நன்மைக்காகவும் மாற்றிக் கொண்டாக வேண்டும்."

"இப்படி நான் கூறுவதினால், தனி 'திராவிட நாடு' கேட்பது நியாயமானது என்று நான் வாதிடுவதாக எவரும் தவறாகக் கொள்ளக்கூடாது. அது வெறும் கானல் நீர்தான் என்பது எனக்குத் தெரியும். இந்தியாவின் ஒரு பகுதி மட்டும் தனித்து நின்று வாழ்வது என்பது சாத்தியமற்றது என்பது எனக்குத் தெரியும். மக்களுக்குள்ள இத்தகைய கருத்தை, அதுவும் தாங்கள் புறக்கணிக்கப்படுகிறோம் என்று நினைக்கும் நேரத்தில், அதைத் தூண்டி விடுவது இலகுவாகும்."

"பொருளாதார வசதிகளைப் பங்கிட்டுக் கொள்ளுவதில் மத்திய சர்க்காருக்கும் மாநில சர்க்காருக்கும் வரையறுக்கப்பட்டுள்ள ஏற்பாடு அநீதியானதாகும். இத்துறையில் நல்ல முடிவு காணப்படவில்லையானால், மத்திய சர்க்காரால் தொடர்ந்தாற்போல் நாம் அலட்சியப்படுத்தப்படுகிறோம் என்று தீர்மானித்துக் கொண்டிருக்கிற மக்களை, உத்தம வாதத் திறமையோடும் பேசும் ஆற்றல் படைத்த கெமெதியினர் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுவது சுலபமாகும் என நான் எச்சரிக்கிறேன்,"

—இவ்வாறு, மேல்சபையில் சென்னை வரவு-செலவுத் திட்டத்தின் மீது நடைபெற்ற விவாதத்தின்போது, முன்னாள் சென்னை முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது:

"சென்னை மாநிலமென்றால் மத்திய சர்க்கார் அதிக அக்கறை காட்டுவதில்லை; அதிகத் தொந்திரவும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்; இதைப் போக்க வழி என்ன என்பது தெரியவில்லை இப்போது அறிவாளிகள் அதிகம்; அவர்களைக் கட்டியாள்வது கடினம்; ஆகவே, நேரிடும் விளைவுகளைத் தவிர்க்க அவர்கள் ஆவன செய்யவேண்டும்,"

"ஆந்திரப் பிரிவினைக்குப் பிறகு இம்மாநிலத்தின் மூல சாதனங்கள் குறைந்து விட்டன; ஆகவே, மத்திய சர்க்கார் இம்மாநில சர்க்காருக்கு வேண்டிய அளவு பண உதவி செய்ய முன்வர வேண்டும்."

"கிராம மக்கள் ஏழைகள் என்பதோடு, தங்கள் நிலையை எடுத்துக்கூற முடியாமலிருப்பவர்கள்; அவர்களைக் கவனிக்காவிடில், தங்கள் வெறுப்பை செய்கையில் காட்டிவிடுவார்கள்."

★

சென்னைக்கு மேலும் அரிசி

மத்திய மந்திரி அறிவிப்பு

79,000 டன் ஒதுக்கப்படுமாம்!

புதுடில்லி, மார்ச். 9—

1954-ம் ஆண்டு முதல் சென்னைக்கு 79,000 டன் அரிசி ஒதுக்கப்பட்டிருப்பதாக இந்திய உதவி உணவு மந்திரி மக்கள் சபையில் தெரிவித்தார்.

இந்த ஆண்டில் ஆந்திராவிலிருந்து சாதாரண வர்த்தக துறை மூலம் 1 லட்சம் டன்னும், மற்ற இடங்களிலிருந்து 1½ லட்சம் டன்னும் சென்னைக்கு அனுப்பப்படும் என்றார்; இவற்றில் இறக்குமதி அரிசியும் இருக்குமென்றார்.

ஐவர் வழக்கு—ஒத்திவைப்பு

சென்னை, மார்ச் 10—

தி. மு. கழகத் தலைவர்கள் ஐவர் தண்டிக்கப்பட்டது சம்பந்தமான இரண்டு அப்பீல்கள் உயர்நீதி மன்றத்தில், நீதிபதிகள் திரு. கோவிந்த மேனன், திரு. பி. என். ராமசாமி இருவர் முன்னிலையில், இன்றைக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாகவும் சர்க்கார் தரப்பில் ஆஜரான கிரவுன் பிராசிகியூட்டரின் முடிவு இன்று தெரிவிக்கப்படுவதாகவும் இருந்தது.

ஆனால், உயர்நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவர் இன்றையத் தினம் வராததால், வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

லண்டன், மார்ச் 10—

பிரிட்டன் 1954—56ல், பாதுகாப்புக்காக ஒதுக்கிய 164 கோடி பவுன்களில் விமானப் படைக்காக 491 கோடி பவுன்கள் செலவிட இருக்கிறது.

புதிய கல்வித் திட்டம்—ஓமந்தூரார் எச்சரிக்கை!

சென்னை, மார்ச் 10—

"ஆரம்பக் கல்வித் திட்டத்தின் பலனாக கிராமத்தில் உள்ள குழந்தைகள், படிப்புக் கற்றுக்கொள்ளாமல்—தொழிலும் கற்றுக்கொள்ளாமல் சோம்பேறிகளாகத் திரிந்து வருகின்றனர். இந்த நிலை நீடித்தால், நிலைமை வெகு மோசமாக மாறிவிடும்."

"தொழில் மூலமாகப் படிப்புக்குத் திட்டம் வேண்டியது தான்; ஆனால், தொழிலுக்கு வசதி இருந்தால்தான் அதைச் செய்ய வேண்டும்; அதில்லாமல், நடைமுறையில் இருக்கும் படிப்பையே குறைக்க முற்பட்டிருப்பதால், கிராமத்திலுள்ள பெண்களும்கூட நிந்திக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது"

"பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை பொய்யாக அதிகரித்துத் தெரிவிப்பது முன்பே வழக்கம்; இப்போது, பள்ளியில் இவ்வளவு பேர் இருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதால், பொய் சொல்வது அதிகரித்துவிட்டது.'

"புதிய கல்வித் திட்டத்தின் பயனாக அதிகக் குழந்தைகள் இப்பொழுது பள்ளிக்கு வருவதில்லை; முன்னர் அவர்கள் கற்றுக்கொண்ட படிப்பும் பாழ்பட்டுப்போய்விட்டது; ஆச்சாரியார் இந்த விடயத்தில், தன்னுடைய பிடிவாதத்தை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

—இவ்வாறு, சென்னை மேல் சபையில், வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது பேசுகையில், முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் நிலைமையைத் தெள்ளத் தெளிய எடுத்து விளக்கினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

ஜெனரல் நகீபுக்கு சர்வாதிகாரம்!

—o—

நெருக்கடி தீர்ந்ததாக அறிவிப்பு

கெய்ரோ, மார்ச் 10—

எகிப்து ஜனாதிபதி ஜெனரல் நகீப் மீண்டும் அக்நாட்டின் பிரதம மந்திரியாகவும், புரட்சிக் கவுன்சில் தலைவராகவும் ஆகியிருக்கிறார். அவருக்குப் பூரண அதிகாரங்களும் அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜெனரல் நாசிர் மீண்டும் உதவிப் பிரதம மந்திரியாகிவிட்டார். அவருடைய மற்ற மந்திரி சபை சகாக்களும் பழைய பதவிகளுக்கே திரும்பிவிட்டனர்—அதாவது, நகீப் பதவியிலிருந்து வெளியேற்றிய பிப். 24-ந் தேதிக்கு முன்னர் இருந்த நிலைமை மீண்டும் ஏற்பட்டுவிட்டது.

"அரசியல் நிர்ணய சபை தேர்தல் வேனிற்காலத்திற்குள் நடைபெறும்; அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்," என்று நகீப் அறிவித்தார்.

பிரதமர் பதவியை நாசிர் கைவிட்டு விட்டதின் விளைவாக புரட்சிக் கவுன்சிலின் அமைப்பும் முன்போலவே ஆகிவிட்டது. அதன் உபதலைவராக இருந்த சாலேசலீம் பழைய மந்திரியாகவே போக்குவரத்து மந்திரியானார்.

கண்ணதாசன் உள்ளிட்ட 18 தோழர்களுக்கு தண்டனை உறுதி!

—(:)—

4 தோழர்களுக்கு மட்டும் விடுதலை!

தால்மியாபுரம் அப்பீல் வழக்கில் தீர்ப்பு!

(நமது நிருபர் தந்தி)

திருச்சி, மார்ச் 9—

நேற்று திருச்சி மாவட்ட நீதிபதி திரு. பி. டி. இராமன் நாயர் அவர்களால், கல்லக்குடி அப்பீல் வழக்கில், தீர்ப்பு கூறப்பட்டது.

தோழர்கள் கண்ணதாசன், ஏ. பி. தர்மலிங்கம், ஐ. எம். ஷரீப், இராதாகிருஷ்ணன், தம்புசாமி, உள்பட 18 தோழர்களுக்கு கீழ்க்கோர்ட்டு தீர்ப்பின்படியே, 1½ ஆண்டு, 1 ஆண்டு கடுங்காவல் தண்டனை உறுதி செய்யப்பட்டது.

தோழர்கள் கோபால கிருஷ்ணன், நாராயணன், சந்தான ஜோசப், இரத்தினம் ஆகிய 4 தோழர்கள் மட்டும் விடுதலை செய்யப்பட்டனர்.

இன்று காலையிலிருந்து மாவட்ட நீதிபதி கோர்ட்டில் தோழர்கள் சி. பி. சிற்றரசு, எம். எஸ். மணி, பராங்குசம், நெடுமாறன், இளமுருகு, மாணிக்கம், அழகமுத்து, பரமசிவம், மற்றும் வெளியூர், உள்ளூர் தோழர்கள் ஏராளமாக வழக்கின் முடிவை எதிர்பார்த்துக் குழுமியிருந்தனர்.

சரியாக பிற்பகல் 3 மணிக்கு நீதிபதி அவர்கள் தீர்ப்பு கூறிய உடன், தோழர்கள் அனைவரும் முகமலர்ச்சியுடன் தண்டனையை ஏற்றுக்கொண்டனர்.

தீர்ப்பு கூறப்பட்டவுடன் தோழர்களுக்கு போலீசாரால் விலங்கிடப்பட்டது.

வழக்கறிஞர் கபில அனந்தர் அவர்கள், விலங்கிடுவதை ஆட்சேபித்து, நீதிபதியிடம் எடுத்துக் கூறினார். பின் சிறிது நேரம் கழித்து, தோழர்களை போலீஸ் லாரியில் ஏற்றும்போது விலங்குகள் நீக்கப்பட்டன.

5½ மணி அளவில் தோழர்களை போலீஸ் லாரியில் ஏற்றிப் போகும்போது குழுமியிருந்த மக்கள், "ஆச்சாரியாரின் அடக்குமுறை ஆட்சி ஒழிக!"—"கல்லக்குடி வழக்குத் தோழர்களை விடுதலை செய்!" என முழக்கினர்.

வழக்கின் முடிவை அறிய தோழர் மு. கருணாநிதி அவர்கள் கோவையிலிருந்து இன்று மாலை திருச்சிக்கு வந்து சேர்ந்தார்.

வழக்கின் முடிவறிந்தவுடன், வழக்கறிஞர் கபில அனந்தர் அவர்களை கலந்து, அப்பீல் செய்வது சம்பந்தமாகப் பேசிவிட்டுத் திரும்பினார்.

தண்டனை பெற்ற தோழர்கள் விவரம்

தோழர்கள் கவிஞர் கண்ணதாசன், அம்பில்-தர்மலிங்கம், ஐ. எம் ஷரீப், இராதாகிருஷ்ணன், தம்புசாமி, வடிவேலு, சண்முகம், தங்கவேல், ரெங்கராஜன், துரை, [illegible], முனுசாமி, வி. எஸ். [illegible]சிவம், இராமதாஸ், [illegible]சாமி, பிச்சை, கருப்பையா, [illegible]ராசன்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணாதுரை

சென்னை 10—3—54 புதன்

போர்ப் படை உடன்பாடு

பாகிஸ்தான் அமெரிக்காவுடன் போர்ப் படை உடன்பாடு ஒன்றை செய்துகொண்டு இருக்கிறது. பொதுவாக உலகிலும், குறிப்பாக ஆசியப் பகுதியிலும் இந்த ஒப்பந்தம், ஏற்கனவே இருந்துவரும் நெருக்கடிகளுக்கு புது முறுக்கேற்றியும், புதிய ஒரு நெருக்கடிக்கு வித்திட்டும் இருக்கிறது என்பதில் ஐயமில்லை.

ஆசிய நாடுகளிடை இதுவரை இருந்து வந்த பலாபலத்தை, இந்த ஒப்பந்தம் புரட்சிகரமாகத் தலைகீழாக மாற்றம் செய்துவிட்டிருக்கிறது. ஒப்பந்தத்தினால் பாகிஸ்தானின் போராடும் சக்தி பெருகத்தான் செய்யும். பாகிஸ்தான் சர்க்கார் கூறுவதுபோல, கட்டணத் தனக்குப் போர்க் கருவி அமெரிக்காவிடமிருந்து கிடைக்க ஏற்பாடு செய்து கொண்டதால், இதுவரை அத்துறைக்கென செலவழித்த பெருந் தொகையைக் கொண்டு, மறைந்து கிடக்கும் இயற்கை வளத்தைத் தொழிற்படுத்தி, தொழில் வகைகளை ஒன்றுக்குப் பலவாகப் பெருக்கி, நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு வழி வகுத்தாலும் வகுக்கலாம். அவ்வகையில் பாகிஸ்தான் வெற்றி பெற்றாலும் பெறக்கூடும். உடன்பாடு ஏற்படுவதற்கு முன்பாக, தனது வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதில் பாகிஸ்தானுக்கு இருந்துவந்த உரிமை, ஒப்பந்தத்திற்குப் பிறகும் அதே அளவில் இருக்கும் என்று சொல்வதற்கில்லை. தான் விரும்பினாலும், விரும்பாமல் போனாலும் அமெரிக்காவின் ஏவல்படி ஆடித் தீரவேண்டிய கட்டாயம் பாகிஸ்தானுக்கு இப்பொழுது ஏற்பட்டு இருக்கிறது என்று விளக்கமாகத் தெரிகிற உண்மையை, அலங்காரமான சொற்களால் ஒருக்காலும் மறைத்துவிட முடியாது. எனவே, பாகிஸ்தான்—அமெரிக்கா போர்க் கருவி உடன்பாடு காலப் போக்கில் பாகிஸ்தான் சுதந்திரப் பறிமுதலில் வந்து முடியுமென்பது வரலாறு காட்டும் பாடமாகும்.

பாகிஸ்தான் விஷயத்தில், மற்ற ஆசிய நாடுகளுக்கு ஒரு விதமான பற்றும், பாசமும் இதுவரை இருந்துவந்து இருக்கிறது. இப்படி இருந்துவந்த பாசம், வெறும் வெளிவேஷமா அல்லது இதயபூர்வமானதா என்று கணித்துக் கூறுவது சுலபமானதல்ல. ஒரு தேசிய அரசு மற்றொரு தேசிய அரசை சந்தேகக் கண் கொண்டு விழிப்பாக நோக்குவது என்பது தேசிய அரசுகளின் அடிப்படை இலட்சணத்தில் ஒன்றாகும் என்பது உண்மையானாலும், அத்தகைய விழிப்புணர்ச்சி கொள்ள வேண்டிய நெருக்கடியான கட்டம் ஆசிய தேசிய அரசுகளுக்கு இதுவரை ஏற்பட்டதில்லை. ஆனால், அந்த நெருக்கடியான ஒரு சூழ்நிலையை ஆசிய அரசுகளிடை, தான் அமெரிக்காவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் மூலம், பாகிஸ்தான் வலிய திணித்திருக்கிறது. இதனால், பாகிஸ்தானின் எந்த ஒரு நடவடிக்கையையும் கூர்ந்து நோக்கவும், நுணுகி ஆராய்ந்து பார்க்கவும் ஆசிய நாடுகள் முனையும். அதாவது, அச்சத்தோடுதான் பாகிஸ்தான் போக்கை இனி ஆசிய நாடுகள் கவனித்துவரும். நிற்க.

கண்ணைக் கொடுத்து சித்திரம் வாங்க வேண்டிய கட்டாயம் பாகிஸ்தானுக்கு ஏன் ஏற்பட்டது? இப்படி ஒரு ஒப்பந்தத்தை, அதுவும் அமெரிக்காவுடன் செய்துகொள்ள வேண்டிய நெருக்கடி பாகிஸ்தானுக்கு ஏற்படுவானேன்?

இதற்குத் தக்க சமாதானம் பெறுவதற்கு, முன்கால வரலாற்றைத்தான் நாம் ஆராய வேண்டும். அப்பொழுது தான் பாகிஸ்தான் போக்கில் ஏற்பட்ட அபாயகரமான மாற்றத்தை நாம் சுலபமாக உணர்ந்துகொள்ள முடியும்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இருந்துவரும் நேசப் பண்பு எத்தகையது என்பது பகிரங்க இரகசியம். தொட்ட குறை, விட்ட குறையால் ஏற்பட்ட பூசலும் பிணக்கும் இரு நாடுகளிடையேயும் இன்னும் ஒழுங்காகத் தீர்ந்து போனபாடில்லை; அதில் மிச்சம் மீதி இருந்துகொண்டுதான் இருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்திற்கு அரசியல் விடுதலை கிடைத்த உடனே, ஆசியா பகுதியில் உள்ள அரசுகளுக்கெல்லாம் தலைமையேற்று நடத்தும் பொறுப்பு இந்தியாவிற்கே என்று பகட்டாகப் பேசப்பட்டது. ஆசிய நாடுகளின் பிரதமர்கள் எல்லாம் இந்தியாவில்கூடி, அதற்கான வகை காணுவது என்றெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டது. 'எண்ணெய் செலவேயல்லாது பிள்ளை பிழைத்தபாடில்லை' என்னும் கதைபோல், விளம்பரந்தான் வேண்டிய அளவு செய்யப்பட்டதே அல்லாது, ஆசியாவிற்கு வழி காட்டும் பொறுப்பு இந்தியாவைச் சார்ந்தது என்பது வெளிற்கால கனவாக முடிவுற்றது.

இந்த அரசியல் விளையாட்டு, பாகிஸ்தான் ஆளவந்தார்களிடம், இந்தியா போக்கில் அச்சத்தையும், அழுக்காற்றையும் மூட்டிவிட்டது. அதுவும் தனக்கொரு தலைமை பீடம் வேணுமென்ற பேராவலில், மத்திய கிழக்குப் பகுதிகளில் பொய்க்கால் குதிரை ஆட்டம் போட்டது. மதத்தை முன் வைத்து, புதைந்துபோன இஸ்லாம் அகிலக் கருத்துக்கு மீண்டும் தூபமிட்டது பாகிஸ்தான். இம்முயற்சியில் பாகிஸ்தானுக்குக் கிடைத்தது வெற்றியா, தோல்வியா என்று இப்பொழுது உறுதி கூறுவதற்கில்லை. இத்துறையில் முயற்சி இப்பவும் இருந்துகொண்டுதான் வருகிறது.

சென்ற பெரும் போருக்கு முன்வரையில் மத்தியக் கிழக்குப் பகுதியில் உள்ள, சிறு சிறு முஸ்லிம் நாடுகளில் நடைபெறும் சம்பவங்கள், ஒவ்வொன்றிற்குப் பின்னாலும் ஒரு வெள்ளையன் ஒளிந்துகொண்டு இருந்ததைத்தான் வரலாறு எடுத்துக்காட்டிக்கொண்டு இருக்கிறது. அந்த வெள்ளையன் ஒரு பிரிட்டிஷ்காரனாகவே இருந்து வந்தான். ஆனால், அந்த நிலை இன்று மாறிப்போய் இருக்கிறது. ஆங்கிலேயன் விட்டுப்போன வெளியை இப்பொழுது அமெரிக்கன் அடைத்துக்கொண்டு இருக்கிறான்.

காலையிலே ஒருவன் கொட்டு முழக்கத்தோடு அரியாசனத்தில் அமர்ந்து, ஆசை மொழி கூறுவான்; மாலையில் அவன் துரத்தப்பட்டோ அல்லது சுட்டுக் கொல்லப்பட்டோ, அவன் வீற்றிருந்த பீடத்தில் வேறு ஒருவன் கம்பீரமாக வீற்றிருப்பான். இப்படி அரசுகளை ஆக்குவதும் அழிப்பதும், தங்கள் சொந்த இலாபத்திற்காக ஒருகாலத்தில் ஆங்கிலேயர்களால் அரசியல் அறமாகக் கொள்ளப்பட்டிருந்தது போய், அந்தப் பொறுப்பு இதுகாலை அமெரிக்காவிடம் தஞ்சம் புகுந்து இருக்கிறது. எனவே, பாகிஸ்தானுக்கும் மத்திய கிழக்குப் பகுதிகளில் குதிரை ஏற நப்பாசைத் தட்டியதில் ஆச்சரியமொன்றுமில்லை.

அமெரிக்கா இந்தியா மீது காட்டிய பாசமும், பதிலாக இந்தியா அமெரிக்கா மேல் காட்டிய மோகமும் இனி எதிர்பார்க்க வேண்டிய வரலாறு ஆகும். அமெரிக்காவின் அரவணைப்பில் பயங்கரம் மறைந்து இருக்கிறது என்பதை இந்தியப் பிரதமர் உள்பட அறிந்துகொண்டோ அல்லது அறிந்துகொள்ளாமலோ, திரும்பி அமெரிக்காவிடம் கொஞ்சிய கிளி மொழிகள், அமெரிக்காவின் அன்பணைப்பைத் தாமும் நாடிப் பெற வேண்டும் என்ற ஆசையை பாகிஸ்தானுக்குக் கொடுத்தது.

அமெரிக்காவுடன் உறவு கொண்டாடுவது சோவியத் நாட்டிற்கு எதிராக முகாம் அமைப்பது ஆகாது என்றும், சோவியத் கோபத்தைத் தூண்டுவதும் ஆகாது என்றும் இந்தியாவிற்கும் அமெரிக்காவுக்கும் இருந்துவந்த நட்பு முறையைப் பார்த்து, பாகிஸ்தானும் ஒரு முடிவுக்கு வந்து விட்டது. விளைவு, பாக்—அமெரிக்கா போர்க் கருவி உடன்படிக்கையில் வந்து நின்றது.

நமது நடத்தையை முன்மாதிரியாகக் கொண்டுதான் பாகிஸ்தானும் அமெரிக்கப் பொறியில் சிக்கி இருக்கிறது என்பதை பண்டித நேருவுக்கு, நமது தேசிய ஏடுகள் ஏற்கனவே இடித்துக் கூறியிருக்க வேண்டும். அந்தக் காலத்திலேயே அமெரிக்க உறவு ஆபத்தானது என்பதை விளக்கமாக்கி பண்டிதரை எச்சரித்து, தமது கடமையை ஒழுங்காக நிறைவேற்றி இருக்க வேண்டும், நமது தேசிய ஏடுகள்! ஆனால், தேசிய ஏடுகளோ ஆலை முதலாளிகளின் வளர்ப்புப் பிள்ளைகளாக இருக்கவே, பண்டிதரின் போக்கிற்கு மாற்றம் கூறாமல், பல்லவி பாடிவந்து, நேருவை தவறான பாதையில் செலுத்தி வந்தன. அந்தத் தவறு, பாகிஸ்தான்—அமெரிக்க போர்க் கருவி உடன்படிக்கையாக வந்து முடிந்து இருக்கின்றன. யாரை நோவது? எவரை குறை கூறுவது?

பாகிஸ்தான் போக்கிற்கு எவர் செயல் தூண்டுதலாக இருந்தபோதிலும், அந்தப் போக்கில் அந்த நாட்டிற்கே ஆபத்து இருக்கிறது; மற்ற ஆசிய நாடுகளுக்கும் ஆபத்து இருக்கிறது என்பதில் துளியும் சந்தேகமில்லை. எந்தக் காரணத்தைக்கொண்டும் போர் நிகழக்கூடாது என்ற உயர்ந்த கருத்தின் மீது அமைக்கப்பட்டுள்ள தி. மு. கழகப் பொதுக்குழு, பாகிஸ்தான் போக்கை வன்மையாகக் கண்டித்திருக்கிறது. மக்கள் எதிர்காலத்தில் கவலை கொண்டுள்ள எவரும், அம்முடிவைப் பாராட்டியே தீருவார்கள் என்பது நிச்சயம்.

"ஒரு கிராமத்திற்கு ஒரு பஸ்!"

இது வெறும் கூப்பாடாம்!

சென்னை, மார்ச் 10—

சென்னை—ஆந்திரா பிரதேசத்திலுள்ள 42,000 பஸ் லாரிகளின் பிரதிநிதிகள் இவ்வார இறுதியில் கூடி மோட்டார் வரியின் கடுமையைக் குறித்து ஆட்சேபிக்கவிருக்கிறார்கள்: இம்மாதிரி மாநாடு நடப்பது இது இரண்டாவது தடவையாகும்.

"உலகிலேயே சென்னை—ஆந்திரா மாநிலங்களிலுள்ளதுபோல் மோட்டார் வரி அவ்வளவு அதிகமாக வேறு எங்கும் இல்லை; 1931ல் இருந்ததைவிட வரி 800 சதவிகிதம் அதிகரித்துள்ளது; ஆனால் வண்டிகள் 21,000லிருந்து 42,000 ஆக மட்டுமே அதிகரித்திருக்கிறது; ஒரு கிராமத்திற்கு ஒரு பஸ் என்பது வெறும் கேலிக் கூச்சல்; 40,000 கிராமங்களுக்கு 40,000 பஸ்கள் வேண்டும்; சர்க்காரின் தீவிரமான நடவடிக்கை எடுத்து கிளர்ச்சி செய்யாவிட்டால், பஸ்ஸைப் போக்குவரத்து முறையே சீர்குலைந்து விடும்," என்று, ஆபரேட்டர்களின் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

நியூயார்க், மார்ச். 10—

அமெரிக்காவில் 100ல் 53 பேர் அடுத்த உலக யுத்தம் 25 அல்லது 30 ஆண்டுகளில் ஏற்படும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

'டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக்குக'

—:o:—

'கிளர்ச்சியை மந்திரியார் மறந்துவிட்டாரா?'

தென்னாடு விஷயத்தில் டெல்லியின் மாற்றாந்தாய் போக்கிற்கு கோவிந்தசாமி கச்சிராயர் கண்டனம்

"1954—55-வது வருஷத்தைய இரயில்வே வரவு செலவு திட்டம் சில வகையில் திருப்தி தரக் கூடியதாக இருந்தபோதிலும், பொதுவாகத் தென்னாடு குறிப்பாக சென்னை மாநிலத்தினுடைய நலன்களைப் பொருத்தவரையில் ஏமாற்றத்தை அளிப்பதாகவே இருக்கிறது. யூனியன் சர்க்காரிடமிருந்து தென்னாடு பெற்றுவரும் மாற்றாந்தாய் பாராமரிப்பை கூடுமானவரை இது விளக்கமாக காட்டுகிறது. நாடு முழுவதிலும் முன்னேற்றத்தைக் காணவேண்டும் என்று நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள ஐந்தாண்டு திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில், ஒரே ஒரு பெருந் திட்டம்கூட தெற்கில் துவக்கப்படவில்லை. அதுவும் சென்னை மாநிலப் பரப்பில் இல்லவே இல்லை."

"கிராமத்தின் பெயர் கல்லக்குடி என்று இருக்கிற முக்கிய காரணத்திற்காக, அங்குள்ள புகை வண்டி நிலையத்தின் பெயர் டால்மியாபுரம் என்று இருப்பதை மாற்றி, கல்லக்குடி என்று பெயரிட வேண்டும் என்று தென்னாட்டுப் பொதுமக்கள் விரும்புகின்றனர். இது பற்றி, மந்திரியாரிடமும் கோரிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். இந்த வகையில், அண்மையில் நடைபெற்ற கிளர்ச்சியை இந்தச் சபையும், மந்திரியாரும் அறிந்திருப்பதாகவே நான் நம்புகிறேன். இதுவரையில் பெயரை மாற்றி அமைக்க சர்க்கார் முன்வராததற்கான காரணங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கிவராது சர்க்கார் பேசாமடந்தையாக இருப்பதற்கான காரணத்தையும் நான் விளங்கிக்கொள்ள முடியவில்லை."

-மேற்கூறியவாறு பார்லிமெண்டு உறுப்பினர் என்.டி. கோவிந்தசாமி கச்சிராயர் அவர்கள் ரயில்வே வரவு-செலவு திட்ட விவாதத்தின்போது பார்லிமெண்டில் எடுத்துரைத்தார். அவர் மேலும் பேசியதாவது:

தேசத்தின் மற்ற பகுதிகளைப் போலவே, தென்னாட்டின் பல பகுதிகளும் புகைவண்டி போக்குவரத்துத் தேவையுடையதாக இருக்கின்றன. அவைகள் கவனிக்கப்பட்டால் நல்ல வருமானத்திற்கும் வழி ஏற்படும். தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரையில் மின்சார புகை வண்டிப் போக்குவரத்தை விரிவாக்க வேண்டுமென்று பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே இரயில்வே போர்டிடம் அந்த திட்டம் கொடுக்கப்பட்டிருந்தும்கூட, இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில், அந்த ஏற்பாடு இடம் பெறக் காணோம்.

இந்தியா முழுதும் ஓடும் புகை வண்டிகள் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ஒரு கோடி டன் நிலக்கரிக்கு மேல் செலவழிக்கின்றன. இதில், 24 சதவிகிதம் ரயில்வே சுரங்கங்களில் இருந்தும், மீதி வெளிச்சுரங்கங்களிலிருந்தும் கிடைக்கின்றன. இவ்வளவு கணிசமான நிலக்கரியை ஆண்டு ஒன்றுக்கு செலவழிக்கும் மத்திய சர்க்கார், தென்னாற்காடு நெய்வேலியில் பரவலான பகுதியில் உள்ள நிலக்கரி சுரங்கத்தைக் குறித்து காட்டப்பட வேண்டிய அளவில் அக்கறை காட்டாமல் இருக்கிறது, திருப்திகரமாக இந்த நிலக்கரிச் சுரங்கம் தொழில்படுத்

(4-ம் பக்கம் பார்க்க)

உங்களுக்குத் தெரியுமா?

★

கேள்விகள்:

1. எந்த இந்தியத் தொழில் ஐந்து ஆண்டுத் திட்டத்தின் உற்பத்தி லட்சிய அளவை ஏற்கனவேயே தாண்டிவிட்டிருக்கிறது?
(அ) சணல்;
(ஆ) துணி;
(இ) எஃகு.

2. இந்திய சர்க்கார் பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள இடம் பெயர்ந்தவர்களுக்காக 1954 மார்ச் 31-ந் தேதி வரையில் செலவழிக்க விருக்கும் மொத்தத் தொகை:—
(அ) ரு 8,00,00,000;
(ஆ) ரு 35,00,00,000;
(இ) ரு 2,10,00,00,000.

3. ரயில்வேக்கள் 1949 ஏப்ரல் முதல் புதிதாக விட்டிருக்கும் சராசரி ரயில்களின் எண்ணிக்கை:
(அ) ஒவ்வொரு 55 மணி நேரத்திலும் அதிகப்படியாக ஒரு ரயில்;
(ஆ) மாதமொன்றுக்கு 13 அதிகப்படி ரயில்;
(இ) ஆண்டொன்றுக்கு 156 அதிகப்படி ரயில்.

4. ஐந்து ஆண்டுத் திட்ட கால இறுதியில் உணவு உற்பத்தியானது இவ்வாறு அதிகரிக்கும்:
(அ) 76 லட்சம் டன்;
(ஆ) 87 லட்சம் டன்;
(இ) 49 லட்சம் டன்.

5. இந்தியாவில் தேசிய உலோக ஆராய்ச்சிச் சாலை எங்கே அமைந்திருக்கிறது?
(அ) ஜாம்ஷெட்பூர்;
(ஆ) ஜில்கோரா;
(இ) ரூர்க்கி.

விடைகள்:

(1)—(ஆ); (2)—(இ); (3)—(மூன்றும் சரிதான்); (4)—(அ); (5)—(அ).

வல்லவராயன்பட்டியில் தி.மு.க. பொதுக்கூட்டம்

4—3—54ல், தி. மு. கழகச் சார்பில், சின்னமனூருக் கருகிலுள்ள தோப்பில் தோழர் ஏ பி. முத்துவெள்ளை தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஏ பி ராசமாணிக்கம், வெ. சோன், அ பாண்டியன் நாட்டுப் பண் பாடினர். தோழர்கள் மு நடராசன், காந்தி, பி. எஸ். ராமையா, சொற்பொழிவாற்றினர். தோழர் செ. கரிகாலன் நன்றி கூறினார்.

சென்னை—மவுண்ட் ரோட் தி. மு. கழக கிளை

28—2—54ல், தோழர் பாலகிரன் தலைமையில், கழகக் கட்டிடத்தில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் பொன்னுசாமி, மாமோகன், மற்றும் பல தோழர்கள் அத்தக்குடி நிதியளிக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றி பேசினர். இறுதியில் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்களை அழைத்து, அத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம் நடத்துவதையும், ரூ 100-க்கு மேலாக நிதி தருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

"வில்லவன்கோதை"

28—2—54 அன்று பெரம்பூர் லட்சுமி டாக்கீஸில் நடைபெற்ற அத்துக்குடி நிதியளிப்புக் கூட்டத்தில் புலியந்தோப்பு 18-வது வட்டம் தோழர் சிவானந்தம் அவர்களின் ஆண் மகவுக்கு தோழர் ஈ வே. கி. சம்பத் அவர்கள் "வில்லவன்கோதை" எனப் பெயரிட்டார். அதன் நினைவாக ரூ. 1 'நம் நாடு' வளர்ச்சிக்கெனத் தரப்பட்டது. மேல்படி ரூ. 1ம் தோழர் கே. எம். கண்ணபிரான் மூலம் வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

பிறக்கும்போதே இறக்கும் குழந்தை இந்தியாவில் அதிகமாம்!

—— (:) ——

ஆண் வயது 32½; பெண் வயது 31½ — மக்கள் தொகைக் கணக்கு தரும் தகவல்

புதுடில்லி, மார்ச் 10—

இந்தியாவில் ஆண்கள் 22.45 ஆண்டும், பெண்கள் 31.66 ஆண்டும் சராசரி உயிர் வாழ்கிறார்களென்று 1951-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின் மீது நடத்தப்பட்ட ஆராய்ச்சியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

1931-ம் ஆண்டு மக்கள் கணக்குப்படி ஆண்கள் வயது 26.9-ம் பெண்கள் வயது 26.56-ம் ஆகும்; அதாவது, 20 ஆண்டு காலத்தில் இந்தியாவில் ஆயுட்காலம் 5 ஆண்டைவிடச் சிறிது அதிகம் உயர்ந்திருக்கிறது.

1941-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் மீது ஆயுள் கணக்கை யாரும் எடுக்கவில்லை. ஆனால் இந்தியா, பாகிஸ்தான் மக்கள் தொகை என்ற புத்தகத்தில் ஒரு ஆங்கிலேயர், ஆண்கள் வயது 32.09 என்றும், பெண்கள் வயது 31.81 என்றும் கணித்திருக்கிறார்.

சிசு மரணம் மிகக் குறைவான பிரிட்டன் போன்ற நாடுகளில் வயது ஆக ஆக ஆயுள் குறைகிறது. ஆனால், இந்தியாவில் அப்படியில்லை. இங்கு பிறக்கும்போது இருப்பதைவிட 5 வயதில் ஆயுள் 8 ஆண்டு அதிகரிக்கிறது. அதாவது, பிறக்கும்போதே நிறைய சிசுக்கள் நம் நாட்டில் இறந்துவிடுகின்றன, இதற்குக் காரணம் இந்தியாவில் உள்ள உறுதியற்ற வாழ்க்கை வசதிகள் தான்.

பிரிட்டனில் 12 லிருந்து, 14 வயதுக்குள் மரணமடைபவர் தொகை மிகச் சொற்பம்; ஆனால், இந்தியாவில் இந்தயினம் 17-லிருந்து 18-க்குள்தான் வருகிறது.

45 வயதுவரை மரண சந்தர்ப்பங்கள் நிதானமாக அதிகரித்தாலும் பின்பு வேகமாக அதிகரிக்கிறது. ஆண்களைவிடப் பெண்களிடையே சிசு மரணம் குறைவாக உள்ளது. ஆனால் பெண் குழந்தைகள் குழந்தையாக இருந்து 11 வயதை அடையும்வரை அதிகம் மரணமடைகின்றன.

குழந்தையாக இருக்கும் போது உள்ளதைவிட 20 வயதில் ஆயுள் உறுதியடைகிறது. அந்த வயது அடைந்துவிட்டால் மேற்கொண்டு பிறக்கும் குழந்தை வாழும் அளவுக்கு உயிர் வாழலாம்.

நெடுவாசல் தி. மு. கழகம்

1—3—54 மாலை 3 மணிக்கு மாரியம்மன் கோயிலில், தோழர் ஆ. மாணிக்கம் தலைமையில், கழகம் அமைக்கப்பட்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: ஆ. ரெங்கசாமி; துணைச் செயலாளர்: கு திருவேங்கடம்; பொருளாளர்: சி. குஞ்சிதபாதம்; மாவட்டப் பிரதிநிதி. ஆ. மாணிக்கம்; உறுப்பினர்கள்: மு. லெட்சுமணன், அ கிருஷ்ணசாமி, வீ. சின்னையன், சொ. சிங்காரம், கா. கோவிந்தன், மு. ரெத்தினம், சி. முருகையன், வா. சுப்பையன், ச ரெங்கசாமி, ரெ. பெருமாள், வெ. ராஜாக்கண்ணு, கா. இராமச்சந்திரன், தி. கிருஷ்ணன், ஆ பெரியதம்பி, மா. குழந்தைவேலு, சொ. நடேசன், க. வேலன், க. சண்முகம், கோ. நடேசன், வெ. வேலு, கா. நாகலிங்கம்.

ஆண்டு நிறைவு விழா

சமயநல்லூர், மார்ச் 4—

சமயநல்லூர் தி. மு. கழக செயற்குழு உறுப்பினர் தோழர் பெ. இராமசாமி அவர்கள் மகன் தயாளனுக்கு 6—3—54 அன்று ஓராண்டு நிறைவு விழா கொண்டாடியதின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூபாய் ஒன்று நன்கொடையாக அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

கல்லக்குடியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

திருச்சி மாவட்டம் கல்லக்குடியில் 6—3—54 மாலை 6-30 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் தோழர் தம்புசாமி அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஆரம்பத்தில் தோழர்கள் திராவிட நாட்டுப் பண் பாடினர்.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் நெடுமாறன், நடராசன் (ஊராண்மைக் கழகத் தலைவர், கல்லக்குடி), அ. பொன்னம்பலனார், இரா. நெடுஞ்செழியன் ஆகியவர்கள் தி. மு. கழகக் கொள்கைகளைப் பற்றியும், மும்முனைப் போராட்டங்களை விளக்கியும், காங்கிரசார் ஆட்சியில் அடக்கு முறைகளும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்வதும், சதி வழக்குகள் மூலம் மக்கள் சக்தியை ஒடுக்கத் திட்டமிடுவதும் ஜனநாயக அரசியல் அநீதியாகிவிட்டதென்றும் விரிவுரையாற்றினர்கள்.

பொதுமக்கள் நடைபாதையை டால்மியா சிமெண்டு தொழிற்சாலை வசதிக்காக அடைக்கப்படுவதை ஊராண்மைக் கழகம் ஆட்சேபித்துத் தீர்மானங்கள் அனுப்பியும், அரசியலார் செல்வாக்கைக் கொண்டு மீறி, பொதுப் பாதையை அடைக்கச் சுற்றி சுவர் எழுப்பி வருவதையும் கண்டித்தும், பாதை அடைக்கப்பட்டால் பொதுமக்கள் கிளர்ச்சியில் ஈடுபடும்படி நிலைமை ஏற்படுமென்பதையும் விளக்கி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்திய மேல்சபை சென்னை மேல் சபை உப தேர்தல்கள்

போட்டியிடுவோர் விபரம்

சென்னை, மார்ச் 10—

அசெம்பிளி அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 5 சென்னை மேல் சபை ஸ்தானங்களுக்கு 6 பேர் போட்டியிடுகின்றனர்.

தேர்தல் மார்ச் 22-ந் தேதி நடக்கும். போட்டியிடுவோர் விவரம் வருமாறு:—

தோழர்கள் எஸ். அண்ணாமலைப் பிள்ளை; டீ. வி. கிருஷ்ணமூர்த்தி; நாராயணன் நாயர் வொரத்; எஸ். நாசப்பையா; வி. வி. ராமசாமி நாடார்; ஏ. சுப்பிரமணியம் ஆகியோர்.

• • •

டில்லி ராஜாங்க சபைக்கு அசெம்பிளியால் தேர்ந்தெடுக்கப்படவேண்டிய 6 ஸ்தானங்களுக்கு 11 பேர் போட்டியிடுகின்றனர். இந்தத் தேர்தலும் மார்ச் 22-ந் தேதி நடைபெறும். போட்டியிடுவோர் விவரம் வருமாறு:—

தோழர்கள் அப்துல்சலாம்; அஹமத் இப்ராஹிம்; டி. வி. கமலசாமி; கே. ஆர். காரந்த்; கே. மாதவமேனன்; தோழியர் பார்வதி - கிருஷ்ணன்; பி. எஸ். ராஜகோபால் நாயுடு; பி. ராமச்சந்திரன்; பி. ரங்கநாத முதலியார்; சதானந்த ஹெக்டே; டாக்டர் பி. சுப்பராயன்.

★

மேல் சபை ஆசிரியர் பட்டதாரி தொகுதிகள்

சென்னை, மார்ச். 10—

பட்டதாரிகள் தொகுதியிலிருந்தும், ஆசிரியர் தொகுதியிலிருந்தும் சென்னை மேல்சபைக்குத் தலா இரண்டு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். 4-ஸ்தானங்களுக்கு 10 பேர் போட்டியிடுகின்றனர்.

போட்டியிடுவோர் விவரம் வருமாறு:—

சென்னை பட்டதாரிகள் தொகுதி: டாக்டர் வி கே. ஜான்; டாக்டர் ஏ. சீனிவாசன்; வசந்தாபாய்; டாக்டர் எம். சந்தோஷம்.

சென்னை ஆசிரியர் தொகுதி:— ஈ. எச். பரமேஸ்வரன்; எம். ஜே. சற்குணம்; வி. கிருஷ்ணமூர்த்தி; ஜான் ஆசீர்வாதம்; டி. பி. வர்க்கீஸ்; தோழியர் தமயந்தி அரைசாமி ஐயர்.

விவசாயப் புள்ளி விவரத் திட்டம்— இருட்டில் தடவுவதற்குச் சமமாகும்!

——(:)——

பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டிய அவசியம் இல்லை என்கிறார் விவசாய மந்திரி

புதுடில்லி, மார்ச் 10—

"விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு பிரமாதமான வாய்ப்புகள் இப்போது உள்ளன; முன்னைவிட மேலும் அதிக அளவில் மக்களுக்கு உணவளிப்பதற்கான முயற்சிகளில் கூடிய சீக்கிரம் வெற்றி காணுவோம்,"

—என்று புள்ளி விவர நிபுணர்களின் கூட்டத்தில் பேசுகையில், மத்திய விவசாய மந்திரி குறிப்பிட்டார்.

நாட்டில் சிற்சில இடங்களில் பெரு கஷ்டங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், நாட்டின் உணவு உற்பத்தி ஏறுமுகமாகவே இருந்து வருமென்றும், அதிகரித்துவரும் மக்கள் தொகையின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் திட்டமிட்டபடி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் போதுமானபடி முயற்சிகள் பலனளிக்காவிடினும் நாட்டுக்குப் போதுமான அளவு உணவளிக்கும்படியான நிலைமையை அடைய முடியுமென்று தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். "உணவுக் கட்டுப்பாடுகளை ரத்து செய்யும் நடவடிக்கைகளை நாம் துணிந்து மேற்கொள்ளாமல் போயிருந்தால், இப்போது உணவுத் தானியம் இவ்வளவு இருந்தும்கூட, பற்றாக்குறை, கள்ள மார்க்கெட், உணவுக் கஷ்டம் ஆகியவை தொடர்ந்து நீடித்து வந்திருக்கும் என்று கூறலாம்; உணவு முனைப் போராட்டம் இப்பொழுது நாம் காணும் அளவுக்குத் திருப்திகரமானபடி இருந்திருக்கும் என்று கூறமுடியாது என்று நான் உறுதியுடன் தெரிவிக்கிறேன்" என்று அவர் கூறினார்.

"பிறப்பு விகிதத்தைக் குறைக்க வேண்டிய அவசியமில்லையென்கிறார்; அதுபற்றி இவ்வளவு சஞ்சலப்பட வேண்டியதில்லை; சரியான வழியில் நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்தால் அது பிறப்பு விகிதத்தை எப்பொழுதும் முந்திக்கொண்டே செல்லும்," என்றும் அவர் தெரிவித்தார்.

விவசாயப் புள்ளி விவரங்கள் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகையில், அவை இதுவரை ஒரே குழப்பமாக இருந்து வந்திருக்கிறதென்றும், கிடைத்துள்ள புள்ளி விவரங்கள் போதுமானபடி இல்லாதிருப்பதுடன் சரியானபடியும் இல்லாதிருப்பதால், அவர்கள் திட்டமிடுவது ஏதோ இருட்டில் தடவுவதற்குச் சமமாகக் கூறலாமே யொழிய நிரந்தரமான அடிப்படையின்மேல் திட்டமிடப்படுவதாகக் கூறமுடியாது" என்றார்.

தெரிந்து கொள்ளுங்கள்

புதுடில்லி, மார்ச் 8—

1. இந்தியத் தொழிற்சாலைகள் 1953-ல் 6,564 ரயில் வாகனங்களும், 785 ரயில்வேக் கோச்சுகளும், 78 எஞ்சின்களும் தயாரித்திருக்கின்றன. 1954ல் 8,500 வாகனங்களும், 1,050 கோச்சுகளும், 116 எஞ்சின்களும் தயாரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.
2. இந்தியா, நடப்பு நிதி ஆண்டின் முதல் மூன்று கால் ஆண்டுகளில் 7,080 குரங்குகளை ஏற்றுமதி செய்திருக்கிறது
3. இந்தியக் கடற்கரை நெடுகிலும் 1,700 கலங்கரை விளக்கங்கள் (லைட் அவுஸ்) இருக்கின்றன.
4. 1953-ல் இந்தியாவுக்கு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் 28,060 பேர் வருகை தந்தனர்; அதாவது முந்திய ஆண்டைவிட சுமார் 3,500 பேர் அதிகமாக வந்தனர்.
5. சுரங்கத் தொழிலாளர்களின் சுகாதார வசதிகளுக்காக மத்திய சர்க்கார் ஆண்டொன்றுக்கு 81 லட்சம் ரூபாய் செலவிடுகின்றனர்.
6. 1953-54-ம் ஆண்டின் முதல் மூன்று கால் ஆண்டுகளில் இந்தியாவில் 39.16 கோடி பெறுமானமுள்ள 88,290 டன் வெளிநாட்டுப் பருத்தி இறக்குமதி செய்யப்பட்டது.

★

சென்னை ஸ்தல ஸ்தாபன தொகுதி

சென்னை, மார்ச் 10—

சென்னை, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு ஸ்தல ஸ்தாபனங்கள் தொகுதியிலிருந்து மேல்சபைக்கு மூன்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதற்கு நால்வர் போட்டியிடுகின்றனர்.

போட்டியிடுபவர்கள் விவரம் வருமாறு:—

டி. புருஷோத்தம்; டி. வி. தேவராஜ முதலியார்; கே. பெருமாள்சாமி ரெட்டி, டாக்டர் சி. நாதமுனி நாயுடு.

இவர்களில் தேவராஜ முதலியாரைத் தவிர மற்றவர்கள் இப்பொழுது அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

தேர்தல் சைதாப்பேட்டையில் உள்ள செங்கல்பட்டு ஜில்லா கலெக்டர் காரியாலயத்தில் ஏப்ரல் 8-ந் தேதி நடக்கும். தேர்தல் அதிகாரி செங்கல்பட்டு கலெக்டராவார். காலை 9 மணியிலிருந்து 1 மணி வரையும், பிற்பகல் 2 மணியிலிருந்து 5 மணி வரையும் நடைபெறும்.

ஊழியர் குடும்பங்களுக்கு வைத்திய உதவி திட்டம்

இந்திய சர்க்கார் யோசனை

கர்நூல், மார்ச். 10—

அனுமதிக்கப்பட்ட தொழிற்சாலைகளிலுள்ள லட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கும் சர்க்காரின் தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் நாடு பூராவிலும் பெரும் முன்னேற்றமடையுமென்று இந்தியத் தொழிலாளர் மந்திரி வி. வி. கிரி கூறினார்.

தொழிலாளர்களுக்கு மட்டுமின்றி, அவர்களுடைய குடும்பத்தினருக்கும் ஓரளவு வைத்திய வசதி செய்து கொடுப்பது பற்றி இந்திய சர்க்கார் [illegible] யோசித்து வருகிறதென்றும் அவர் கூறினார்.

ஆச்சாரியாரின் திட்டத்திற்கு ஆச்சாரியாரின் எதிர்ப்பு!

—(:)—

"'நீங்கள் பெற்ற கல்வியை எங்களுக்குத் தர மறுப்பானேன்?' என மாணவர் உலகம் கேட்கவேண்டும்"

—(:)—

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் விளக்கம்

கும்பகோணம், மார்ச் 9—

"நமக்கெல்லாம் நன்மை பயத்ததும், பொறுப்பும் நம்பிக்கையும் கொண்ட உயர் பதவிகளுக்கு நம்மை உயர்த்த உறுதுணை புரிந்ததுமான கல்வி முறையால், நமது எதிர்கால சந்ததியினருக்கு அறவே உதவாதது என ஏன் கருத வேண்டும் என்பதை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. ஏதாவது தொழில் கற்றுக் கொள்ளுவது நல்லதுதான்; ஆனால், அதன் பெயரால் நாம் செய்வதுபோல் கல்வித் துறையின் முழு அடிப்படையையும் மாற்றி அமைப்பது என்பது விரைவில் கல்வியின்மையிலேயே வந்து நிற்கும்."

"தமிழை போதனா மொழியாகக் கொள்வது நல்லது; ஆனால், எல்லாவற்றையும் ஓரே தாண்டில் தாண்டிவிடலாம் என இந்தி ஆதரவாளர்கள் செய்வதுபோல, இந்தியில் எந்தவித பாட நூற்களும் இல்லாமல் இருக்கும் நிலையிலேயே, ஆங்கிலத்தை உடனடியாக அகற்றிவிடுவதென்பது, முன்னேற்றத்திற்கு அழிவையே உண்டாக்கும்."

—இவ்வாறு யூனியன் சர்க்காரில் வியாபார மந்திரியாக இருக்கிற டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள், குடந்தை நகர உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர் நாள் விழாவில் பேசும்பொழுது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"கடந்த இருநூற்றாண்டுகளாக இருந்துவந்த கல்வித் துறையில் தீவிரமாக மாற்றியமைக்க வேண்டுமென்பதற்கான அவசியம் என்ன என்பது எனக்குப் புலனாகவில்லை. அவர்களும், இப்போதைய கல்வி முறையினால் உருவாக்கப்பட்டவர்களாக இருந்துங்கூட, கலைமுறை திட்டத்தில் சிறந்த நன்மை இருப்பதாக உணர்ந்துகொள்வது அவர்களுக்கு இயலாததாக இருக்கிறது. தாங்கள் பெற்றதை ஏன் தம் பின் சந்ததியினருக்குக் கொடுப்பதில் வெறுப்பாக இருக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அக்கல்வி போதனை தங்களுக்கு ஏன் மறுக்கப்படுகிறது என்ற வினாவை மாணவர் உலகம் கேட்டாக வேண்டும்."

"தீவிர மாற்றம் செய்வது சிறந்த கருத்தல்ல என்பதில் உறுதிகொண்டுள்ளேன். அம்முயற்சி, குறிப்பிட்ட ஒரு நிலையில், அனைவரையும் கொண்டு நிறுத்திவிடும். அந்த நிலை நாட்டின் நலத்துக்குகந்ததாகாது. அனைவரும் நன்கு கல்விபெறாவிட்டால் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னை இல்லாது தொலைந்துவிடும் என்ற கருத்தில், எல்லா சிக்கலான பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு இம்மாற்றம் ஒரு வழியாகலாம்."

"இந்தி மொழியை படிப்படியாகத்தான் கற்க முடியும். தமிழ் மொழி மூலம் கல்வி பெறுவது நல்லதே; ஆனால் போதிய பாட நூற்கள் இப்பொழுது கிடையாது. ஏராளமாக மொழிபெயர்ப்புப் பணி நடைபெற்றாக வேண்டும். இந்தி வகையில் இந்தச் சங்கடம் இன்னும் கூடுதலாகும்."

"குறிப்பிட்ட ஒரு மொழியை ஒழுங்காகக் கற்றுக்கொள்ள வேண்டுமானால், அந்த மொழி வழங்கும் நிலப்பரப்பில் ஒருவர் இருந்தால்தான் அது நிறைவேறும். அந்த நிலையிலுங்கூட இந்தியைக் கற்பது என்பது மெத்த கடினம். டெல்லியிலும், மற்ற வடநாட்டுப் பகுதிகளிலும் நடந்த பத்து ஆண்டுகளாக நான் தொடர்பு கொண்டிருந்த போதிலுங்கூட எனக்கு இந்தி மொழியில் பேச வராது. மற்றவர்கள் அம்மொழியில் பேசுவதை என்னால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

"இங்கு நடைபெற்ற இந்தி நாடகத்தில் பேசப்பட்ட இந்தி மொழி, பலராலும் உணர்ந்துகொள்ளப்பட்டுள்ள இந்தி மொழி அல்லவே அல்ல என்பதை மிக்கத் துணிவுடன் நான் அறுதியிட்டுக் கூறுவேன். படிப்படியாகத்தான் இந்தியை போதிக்க முடியும்."

புதிய கல்வி.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து அவர் பேசினார்:-

"நானே ஒரு ஊரின் பள்ளிக்கூடத்திற்கு நேரில் சென்று பார்த்தேன்; 40 பேர் வரவேண்டியதற்கு 10 பேர்களே வந்திருந்தனர். இதுபற்றி எதிர்க்கட்சிக்காரர்கள் கூறுவதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது."

"கிராமங்களில் எதிர்க்கட்சியினரின் செல்வாக்கு வெகு வேகமாகப் பரவி வருவதை சர்க்கார் கண்ணை மூடிக்கொண்டு கவனிக்காமல் இருந்துவிட வேண்டாம்."

"எல்லாவற்றிற்கும் பிடிவாதம் பிடிப்பதைப்போல, கல்வித் திட்ட விஷயத்திலும் பிடிவாதம் காட்டுவதை ஆச்சாரியார் விட்டுவிட வேண்டும். இல்லையென்றால் தொந்திரவுகள் அதிகமாகிவிடும் என்று எச்சரிக்கிறேன்; இதன் பலன் வரப்போகும் ஜில்லா போர்டு தேர்தல்களில் நிச்சயமாகத் தெரியத்தான் போகிறது."

"நல்ல வசதி, சூழ்நிலை இல்லாமல் திட்டத்தைக் கொண்டு வந்து நடத்தக்கூடாது; இதில் பிடிவாதம் வேண்டாமென்று மீண்டும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

கோவை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்

★

கோவை மாவட்டச் செயலாளர் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அறிவிக்கிறார்:—

"14-3-54 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் கோவையில் சுக்கிரவாரப்பேட்டை தியாகராயர் படிப்பகம் கட்டிடத்தில் கோவை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக செயற்குழு கூட்டம் நடைபெறும்.

பொதுக் குழு முடிவுகள் பற்றியும், கோவை மாவட்டத்தில் கழக அமைப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்படும்.

மாவட்ட கழகத்தில் பதிவு செய்து கொள்ளாத, புதியதாகத் துவக்கப்பட்ட கிளைக் கழகப் பிரதிநிதிகள் இதையே அழைப்பாகக் கொண்டு கலந்து கொள்ள வேண்டுகின்றேன்.

செயற் குழு உறுப்பினர்கள் அனைவரும் வருகை தர வேண்டுகின்றேன்."

கைத்தறி வார பொதுக் கூட்டம்

★

12—3—54 வெள்ளி மாலை 5-30 மணிக்கு, ஏகாம்பரகுப்பம் பாண்டியன் அரங்கில், சிவசுப்ரமணிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் சார்பில், தோழர் கே. என். இராமசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, ஏ. எஸ். சி. கிருட்டினசாமி, டி. சக்கரவர்த்தி, வெற்றி அரசு ஆகியோர் பேசுவர்.

புதிய கல்வித் திட்ட எதிர்ப்புக் கூட்டம்

★

12—3—54 வெள்ளி மாலை 5 மணிக்கு, வாணியம்பாடி பெரியப்பேட்டை பாலாறில், வாணியம்பாடி பீர்க்கா விவசாயிகள் சங்கத்தின் சார்பில், தோழர் எம். பி. வடிவேல் முதலி தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, வி. பொன்னுசாமி, ஏ. கே. தண்டபாணி, வி. எஸ். விஸ்வநாதம், ஆர். வி. சண்முகம், சி. அய்யாதுரை, கே. என். கேசவன், மணிமொழியார், டி. சர்க்கரை, டி. ஏ. ஆறுமுகம், ஈ. எல். வேணு, எம். மணி, தத்தப்பன் ஆகியோர் பேசுவர்.

கருணாநிதி இம்மாத நிகழ்ச்சிகள்

★

மார்ச்	12:	பாலக்காடு
,,	13:	கோவை
,,	14:	கோவை ராசேந்திரன் நாடகத் தலைமை
,,	16:	திருவையாறு
,,	20:	தேவபாண்டலம்
,,	21:	விருத்தாசலம்

திருத்தம்

★

வெளியீடு 4-3-54 'நம் நாடு' இதழில் அத்தூர்க்குடி வழக்கு நிதிக்கு, "அம்மாபேட்டை மெயின்ரோடு கிளை 501 காலணா கொடுத்தது," என்பதற்குப் பதிலாக, "அம்மாபேட்டை கிளையின் சார்பாக 501 காலணாக்கள் கொடுக்கப்பட்டது," என்று திருத்தி வாசித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கோரிக்கைகளை நிறைவேற்ற ஆலை நிர்வாகி ஒப்பம்

உண்ணாநோன்பு கைவிடப்பட்டது

புகலூர், மார்ச். 9—

புகலூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர் சங்கச் செயலாளரான தோழர் என். ராமையா அவர்கள் நேற்று துவக்கிய உண்ணாநோன்பை இன்று காலை 6.30 மணிக்கு நிறுத்திக் கொண்டார்.

கரும்பு உற்பத்தியாளர்களும், ஆலை நிர்வாகிகளும் கலந்து பேசியதின் விளைவாக தொழிற் சங்கக் கோரிக்கைகள் பலவற்றை நிறைவேற்றுவதற்கு ஆலை நிர்வாகத்தினர் ஒப்புக்கொண்டு விட்டதாலேயே மேற்படி உண்ணாநோன்பு கைவிடப்பட்டது.

பி.—சோ. கட்சி மந்திரி சபை அமைக்கும்?

திரு—கொச்சியின் இன்றைய நிலைமை

திருவனந்தபுரம், மார்ச். 10—

காங்கிரஸ் அல்லது கம்யூனிஸ்டுகளின் மையமான ஆதரவுடன் சர்க்கார் அமைப்பதின் சாத்தியத் திட்டங்களை இன்று சென்னையில் கூடும் பி—சோ. தேசிய நிர்வாகக் குழு பரிசீலனை செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பி.—சோ. கட்சி கம்யூனிஸ்டுகளுடன் சேராமல் மந்திரி சபை அமைக்குமாயின், அதை எதிர்க்காதிருக்கக் கூடுமான வரை முயலவேண்டுமென காங்கிரஸ் கட்சி மெம்பர்கள் கருதுகின்றனர்.

இதன் மத்தியில் மாநில கம்யூனிஸ்டு கட்சி இன்று தனது இரண்டு நாள் கூட்டத்தை ஆரம்பித்தது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியும், பி.—சோ. கட்சியும் கூட்டாகத்தான் சர்க்கார் அமைக்க வேண்டுமென்று கம்யூனிஸ்டு கட்சி கருதுகிறது.

சஙய, மார்ச். 9—

இடதுசாரிகளின் ஐக்கிய முன்னணியுடன் பி—சோ. கட்சி கூட்டு மந்திரி சபை அமைப்பதென்கிற யோசனையை எதிர்த்து ஜெயப்பிரகாஷ் நாராயணன் கிருபளானிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"பி.—சோ. கட்சி வெளியே இருந்துகொண்டு, இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி மந்திரி சபை அமைப்பதற்கு இடங்கொடுத்து, அவர்களுடைய செயல்களைக் கவனித்து வரவேண்டும்," என்று அவர் யோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது.

டாக்டர் வரதராசுலு மீது நகர சபை வழக்கு

வாபஸ் பெறப்பட்டது

சென்னை, மார்ச். 10—

ஐலண்டு மைதானத்தில் சென்ற ஆண்டு நடைபெற்ற கைத்தறி குடிசைத் தொழில் கண்காட்சியில் மின்சார மோட்டார்கள் அமைத்ததற்காக நகர சபைக்கு கட்டவேண்டிய வரியை கட்டாததற்காக நகர சபைக் கண்காட்சி உபதலைவர் டாக்டர் வரதராசுலு நாயுடு மீது தொடரப்பட்ட ஒரு வழக்கை வாபஸ் பெறும் தீர்மானம் நேற்றுமாலை நடைபெற்ற நகர சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சர்வதேச நிதியிலிருந்து கடன் வாங்கிய தொகை

இந்தியா திருப்பித் தர ஆரம்பித்து விட்டது

பம்பாய், மார்ச். 10—

இந்தியா, டாலர் பிரதேசத்திலிருந்து உணவும், இயந்திரங்களும் வாங்க 1948-ல் சர்வதேச நிதியிலிருந்து வாங்கிய 10 கோடி டாலர் கடனைச் சிறிது சிறிதாக திருப்பிக் கொடுக்க ஆரம்பித்து விட்டது.

இதுவரை வட்டிப் பணமே கொடுக்கப்பட்டு வந்ததெனவும் இப்போது அசல் தொகையைத் திருப்பித் தர ஆரம்பமாகியிருக்கிறதென்றும் தெரிகிறது.

ஒரிசாவில் மூன்று இலாக்காக்களில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட்டதின் காரணமாக வருமானத்தில் ரு 7 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

டால்மியாபுரத்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டால், பலவிதமான தொழில்கள் நிர்மாணிப்பதற்கும், அதனால் தென்னாட்டு மக்களின் பொருளாதார வாழ்வு உயர்வதற்கும் வழிபிறக்கும் என்றும் சொல்லப்படுகிறது. சென்னை சர்க்கார் கண்காணிப்பில் அந்த நிலக்கரிச் சுரங்கத் தொழில் சாதாரணமாக நடத்தப்பட்டு வருகிறது. அதற்காக உபயோகப்படுத்தப்படும் இயந்திர சாதனங்கள் பழைமையானதாகவும் பழுதுபட்டுப் போனதாகவும், புதுப்பிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாகவும் இருக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. அப்படி அவைகளைப் புதுப்பிப்பதனால் பெருந்தொகை தேவைப்படும்.

குறிப்பிட்ட சில ரயில்வே உபயோகத்திற்காக கதர்த் துணிகளையே வாங்கி உபயோகிக்க வேண்டுமென்று ரயில்வே போர்டுக்கு சர்க்கார் உத்திரவிட்டிருப்பதாக மந்திரியார் குறிப்பிட்டார் — சென்ற ஆண்டில் தான் கதருக்கும் மற்ற கைத்தறிக்கு உதவி செய்வதற்காகவும் ஆலைத் துணிகளின்மீது செஸ் வரி போடப்பட்டது.

ரயில்வே இலாக்கா சம்பந்தப்பட்ட சர்க்கார் ஸ்தாபனங்கள் தங்கள் உபயோகத்திற்காக கதர் துணியை மட்டுந்தான் வாங்க வேண்டும் என்றால், மற்ற கைத்தறித் துணிகளின் கதி என்னாவது? கைத்தறித் துணியினால் லட்சக்கணக்கான மக்கள் உயிர் வாழ்வதோடு, நமது பழம்பெரும் தொழில் அல்லவா அது? ஒன்றைச் சொல்வதும், செயலில் வேறு ஒன்று செய்வதுமாக சர்க்கார் நடந்துகொள்ளுகிறவரையில், நமது மக்கள் செம்மை பெறப்போவது இடையாது.

சிதம்பரம் புகை வண்டி நிலையத்தை விரிவாக்குவது பற்றியும், நிலையத்தில் மேம்பாலம் கட்ட வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியும் அவர் பேசினார்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, லூயி நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். [illegible]